# உதயன்

UTHAYAN

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஞூ ஐப்பசி மீ 19 உ திங்கட்கிழமை (05 - 11 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 16 கதிர்: 243


# மாவிட்டபுரம் தாக்குதலில் 15 படையினர் மரணம்!

## வீர மரணம்

யாழ்ப்பாணம், நவ 5

நேற்று மாங்குளத்தில் படையினருடன் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான 2 ஆவது லெப்டினன்ட் மாதவன் (சிங்கராஜன் ஸ்ரீகாந்தரூபன் - முல்லைத்தீவு) வீரமரணமடைந்தார். (உ)

## நான்கு காவல் அரண்கள் சேதம்

யாழ்ப்பாணம், நவ: 5

நேற்று முன்தினம் இரவு 8-40 மணியளவில் மாவிட்டபுரம் சந்தியில் அமைந்திருந்த படையினரின் காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் பதினைந்துக்கும் அதிகமான இராணுவத்தினர் உயிரிழந்தனர்; ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

காவல் அரண் ஒன்று விடுதலைப் புலிகளின் வசம் வீழ்ந்தது. மற்றும் மூன்று காவல் அரண்கள் சேதமுற்றன.

இந்தத் தாக்குதலின்போது மூன்று பெண் போராளிகள் உட்பட 12 வேங்கைகள் களப்பலியாகினர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

- ★ ஏ.கே. - எல்.எம்.ஜி. -02
- ★ ரி 56 - 1 - 02
- ★ ரி 56 - 2 - 06
- ★ ரி 81 - 02
- ★ ரவைகள் - 3,849
- ★ லிங் - 750
- ★ மாஸீன் - 12
- ★ ஹோல்சர் - 01
- ★ ரைபிள்கிரனெட் - 07

## 3 பெண் போராளிகள் உட்பட 12 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 5

மாவிட்டபுரம் தாக்குதலில் மூன்று பெண் போராளிகள் உட்பட பன்னிரண்டு விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

மேஜர் சஞ்சிகா (சுந்தரராஜ் கலைச்செல்வி - சரவெட்டி), கப்டன் அருந்ததி (சண்முகநாதன் சிவரஞ்சனி- நாயன்மார்கட்டு), லெப். காஞ்சனா (கணபதிப்பிள்ளை சரோஜினி - வல்வெட்டித்துறை).

லெப். மரிக்கார் (செல்வமாணிக்கம் ரவீஸ்வரன் - நெடுங்கேணி), 2 ஆவது [4 ஆம் பக்கம் பார்க்க]

## குடாநாட்டில் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 5

மாவிட்டபுரம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த போராளிகளுக்கு நேற்று குடா நாட்டின் பல பகுதிகளிலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வீதிகளில் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. சந்திகளில் புரட்சி கீதங்கள் ஒலித்தன. [ஒ 6]

## கிளிநொச்சியில் பொம்மர் தாக்கு

நேற்று கிளிநொச்சி டிப்போ சந்திப் பகுதியில் நான்கு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல்களின் போது, இரு மாடுகள் அந்த இடத்தில் சிதறி மரணமாகின. [உ]

## மாங்குளத்தில் மோதல்

மாங்குளத்தில் நேற்று படையினர் வெளியேற முற்பட்டபோது, விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

இதை அடுத்து படையினர் முகாமுக்குத் திரும்பிச் சென்றனர். (ஒ)

## அத்வானி விடுதலை

புதுடில்லி, நவ. 5

ராமஜென்ம பூமி - பாப்ரி மசூதி பிரச்சினை தொடர்பாக கைது செய்யப்பட்ட பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் லால்கிஷன் அத்வானி நேற்றுக்காலை விடுதலை செய்யப்பட்டார்.

அவருடன், வேறுபல இடங்களில் கைது செய்யப்பட்ட பாரதீய ஜனதா எம்.பிக்கள் சிலரும் நேற்று விடுதலையாகினர். (உ-எ)

## திருமலையில் சிப்பாய் பலி

கொழும்பு, நவ. 5

திருகோணமலை மாவட்டத்தில் புதுக்குளம்பற்று என்னும் இடத்தில் விடுதலைப் புலிகளுக்கும் ஆயுதப்படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஒரு [illegible] கொல்லப்பட்டார். [ஒ-எ]

## எருக்கலம்பிட்டி சென்ற படையினர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 5

மன்னார் பி. எம். ஸி. கட்டட முகாமிலிருந்து நேற்று எருக்கலம்பிட்டி நோக்கிச் சென்ற படையினரை விடுதலைப்புலிகள் இடைவழியில் வழிமறித்துத் தாக்கினர்.

தாக்குதலினால் படையினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்துமுழுவிவரமும் தெரியவரவில்லை என்றும் —

தாக்குதலையடுத்துபடையினர் எருக்கலம்பிட்டிக்கு ஒரு மைல் தொலைவில் உள்ள 5ஆம் கட்டையில் நிலைகொண்டிருப்பதாகவும் —

விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

## திருகோணமலையிலும் விமானக்குண்டு வீச்சு!

திருகோணமலை மாவட்டத்தில், தமிழர் வாழும் சில பகுதிகளில் அகோர விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையில் விமானப்படையினர் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்தினர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்களும் ஒப்புக் கொண்டுள்ளன.

விமானக் குண்டுவீச்சினால் ஏற்பட்ட உயிர், உடைமைச் சேதங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (ஒ)

## நெடுங்கேணிக் குளம்காட்டில் சனி முதல் கடும் சண்டை

யாழ்ப்பாணம், நவ. 5

திருகோணமலை நெடுங்கேணிக்குளம் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் (சனி) முதல் கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வில்கம் விகாரை, இறக்கக்கண்டி, நிலாவெளி இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறி நெடுங்கேணிக்குளம் காட்டுப்பகுதியில் படையினர் தேடுதல் நடத்தியபோதே மோதல்கள் ஆரம்பமாகின.

இந்த மோதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் கோணேஸ் என்ற போராளி வீரமரணமடைந்தார்.

இந்தக் காட்டுப்பகுதியில் தொடர்ந்தும் கடும் மோதல்கள் நடந்து வருகின்றன. படையினருக்கு உதவியாக வான் தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன. [ஒ]

## மாங்குளம் முகாம் அருகில் மின் கேபிள்கள் சேதம்

### திருத்த வேலைகள் தாமதமாகலாம்

யாழ்ப்பாணம், நவ. 5

மாங்குளம் இராணுவ முகாமுக்கு அருகில் ஏற்பட்ட சேதத்தாலேயே குடாநாட்டுக்கான மின்சாரம் கடந்த 31 ஆம் திகதி இரவு தொடக்கம் தடைப்பட்டிருக்கிறது.

மின்சாரசபை அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

மாங்குளம் இராணுவ முகாமுக்குச் சமீபமாக யாழ்ப்பாணத்துக்கு நீர்மின்சாரம் வழங்கும் 132 கே.வி, 33கே.வி கேபிள்கள் சேதமடைந்துள்ளதாக அவர் கூறினார்.

கிளிநொச்சி மின் பொறியியலாளர் அலுவலகத்தில் இருந்து ஊழியர்கள் அங்கு சென்றுள்ள போதிலும், திருத்த வேலைகள் தாமதமாகலாம் என்றும் அவர் சொன்னார்.

இந்தக் கேபிள்கள் சேதமடைந்ததால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கான மின்விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## வவுனியாவும் இருளில்!

யாழ்ப்பாணம், நவ. 5

வவுனியாவிலும் மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாங்குளத்தில் மின் கேபிள்கள் சேதமடைந்ததாலேயே மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணத்தில் கூறப்பட்டபோதிலும், அதற்கு எதிர்மாறான சில தகவல்களும் வெளியாகியுள்ளன.

வடபகுதிக்கான மின்தடை ஒரு திட்டமிட்ட செயல் என்றும்- அனுராதபுரத்தில் ஜே.வி.பி. யினரின் தாக்குதலினால் டிரான்ஸ்போமர் சேதமடைந்ததால், மின்சாரம் தடைப்பட்டது என்றும்- வேறுபட்ட விதத்தில் பேச்சுகள் அடிபடுகின்றன. ஆனால் அவற்றை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (ஒ)

## விடத்தல்தீவில் நேற்று குண்டு வீச்சு; ஒருவர் பலி

யாழ்ப்பாணம், நவ. 5

மன்னார் விடத்தல்தீவில் நேற்று இரண்டு பொம்மர்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் காயமுற்றார்; ஒரு வீடு பலத்த சேதமடைந்தது.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்தசிவாப்பிள்ளை தேவா [வயது 30] என்பவர் உயிரிழந்தவர் என்றும் -

அந்தோனிப்பிள்ளை சிவராசா [விடத்தல்தீவு] என்பவர் காயமுற்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## தெல்லிப்பழையில் ஷெல்; ப.நோ.கூ. களஞ்சியம் சேதம்

நேற்று முன்தினம் (சனி) இரவு 9 மணியளவில் காங்கேசன்துறை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மொத்த வியாபார நிலையக் களஞ்சியத்தின் மீது விழுந்து வெடித்தது.

களஞ்சியக் கட்டடம், லொறி மற்றும் அங்கு வைக்கப்பட்டிருந்த அரிசி, உப்பு என்பனவும் சேதமடைந்தன.

ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்பட்டது. [ஒ-3]

## 'டிரான்ஸ்போமர் ஒயில்'; இன்னும் அனுமதி இல்லை!

### கூ. படைத் தலைமையகம் அசட்டை

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ்ப்பாணத்தில் உள்ள மின்மாற்றிகளுக்குத் தேவையான எண்ணெய் [டிரான்ஸ்போமர் ஒயில்] அனுப்புவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் இன்னும் அனுமதி வழங்கவில்லை. இந்த விடயத்தில் கூட்டுப்படைத் தலைமையகம் அசட்டையாக இருந்து வருகிறது.

இவ்வாறு இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

மின்சார சபையின் அதிகாரி ஒருவர் இது குறித்துத் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்துக்குச் சீரான மின்சார விநியோகம் வழங்கத் தேவையான 'டிரான்ஸ்போமர் ஒயிலை' [4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். [14550]

### வாங்கலாம், விற்கலாம்

தினமும் திறந்திருக்கும். பழைய புத்தகங்கள் வாங்கப்படும், விற்கப்படும் Senathirajah, Second Hand Book House, 13/6. ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி முன் லேன், யாழ்ப்பாணம். [14577]

### தையல் வேலை

பெண்களுக்கான ஆடைகள் வெட்டித் தைக்கக்கூடிய பெண் தேவை. தொடர்பு டில்சாந்தி 73, பிரவுண் வீதி. யாழ்ப்பாணம். (காலை 9 00 மணி முதல் மாலை 5 மணி வரை) (14627)

### வாசகர்களுக்கு நன்றி

மீரா வெளியீடுகளுக்கு நல்லாதரவு வழங்கி வரும் வாசகர்கள் அனைவருக்கும் உள்ளம் நிறைந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம். மீரா நாவல்கள் பற்றிய விமர்சனங்களை, ஆலோசனைகளை எழுதுங்கள் மீரா வெளியீட்டகம், 38. வேம்படிவீதி, யாழ்ப்பாணம் (14559)

### அல்டி (ALDI)

சகலவிதமான மணிக்கூடுகள் திருத்துவதற்கும் கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மணிக்கூடு பற்றறிகள், நியாய விலையில் பெற்றுக் கொள்வதற்கும் இன்றே விஜயம் செய்யுங்கள் அல்டி 269/ மின் சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். முன்பு எம்மிடம் பணிக்கூடு திருத்த தந்தவர்கள் 10 ம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளவும். (சி/5364)

### கிளீன் கட் போட்டோஸ்ரற்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும் அடையாள அட்டைசட்டு சவரிட்டுக் கொள்ளவும் கிளீன் கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் யாழ். இந்து மகளிர் சந்திக்கு அண்மையில். (சி-5355)

### அஷ்டலக்ஷ்மி 1991

1991ம் ஆண்டுக்கான அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டர் [முதலாம் தர பதிப்பு விசேடதாள்] வெளி வந்து விட்டது. பத்திரிகைத் தாள் தட்டுப்பாட்டால் மொத்த வியாபாரம் இல்லை. விலைரூபா 47.50சதம்மட்டும். அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. [14629]

## ஷெல் வீச்சில் மேல்மாடி சேதம்

மல்லாகம், நவ 5

பலாலி இராணுவ முகாமில் இருந்து கடந்த வியாழக்கிழமை இரவு ஏவப்பட்ட ஷெல்லினால் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க இரும்பு விற்பனை நிலைய மேல்மாடி சேதமடைந்தது. (ஒ-ரி)

## கிணற்றில் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ் பிரப்பங்குளம் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் வயோதிப மாது ஒருவர் கிணற்றில் விழுந்து மரணமானர்

பிரான்ஸிஸ் தங்கம்மா (வயது 55) என்ற மாதவே உயிரிழந்தவராவார் (உ)

# தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்

[வரைவுள்ளது]

## கலந்துரையாடல்

மேற்படி சங்கக் கிளைக்குழு, பொதுச் சபைப் பிரதிநிதி, இயக்குனர்கள், ஊழியர்களுக்குமான கலந்துரையாடல் 7 - 11 - 90 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடைபெறும். மாவீரர் தினம் பற்றி ஆலோசிக்கப்பட வேண்டியிருப்பதால் சகலரும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சி. சிவமகாராசா,
தலைவர்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.

1. 11. 90 (சி-5373)

# விண்ணகத்தில் ஈராண்டுகள்



பிறப்பு:
22- 02- 1912

இறப்பு:
05. 11 1988

## பி. ஜே. அமிர்தநாயகம்

இறைவா! மரித்த உமது அடியானுக்கு
நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக யாழ்/புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திங்கட்கிழமை 5 ஆம் திகதி காலை 6 15 இற்கும், அருள் ஆச்சிரமத்தில் அன்று காலை 6.00 மணிக்கும், புனித அந்தோனியார் ஆலயம் பண்டத்தரிப்பில செவ்வாய்க் கிழமை காலை 6 30 இற்கும் பலிப்பூசைகள் நிறைவேற்றப்படும்.

மனைவி, சகோதரி,
மக்கள், உறவினர்.

128, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். [14602]

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



அவனியில் உதிப்பு:
29 – 10 – 1957

அநியாய அழிப்பு:
08 – 08 – 1990

திரு.
## பேட்டி அன்ரன் எதிர்வீரசிங்கி
(B. Sc)

(ஆசிரியர், யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்)

அன்பினால் உம்மை நீரும் – எம்
அகந்தனில் பதிய வைத்தீர்
என்பெலாம் உருகுதையோ
எங்ஙனம் மறப்பதும்மை

பிரிவால் துயருறும்;
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/சுதுமலை சிந்மய பாரதி-
வித்தியாலயம்,
மானிப்பாய் [14621]

# 5 ஆம் ஆண்டு நினைவுகள்



அமரர்
தம்பு மாசிலாமணி
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

தோற்றம்:
02 – 06 1934

மறைவு:
05 – 11 1985

திதி:
09 — 11 – 1990

ஆண்டுகள் ஐந்து
காற்றினில் கலந்தன!
ஆயினும் நினைவுகள்
அப்படியே உள்ளன
மாசிலா முகமும்
மாசிலா உளமும்,
பாசமாய் எம்மை
அணைத்திடும்
குணமும்,
வஞ்சனை இலாது
நீ வாழ்ந்திட்ட வாழ்வும்
நெஞ்சினை விட்டு
நீங்கவே மாட்டா.

குடும்பத்தினர்.
நோலியம்பதி
கொற்றாவத்தை. [14619]

# 1st Death Anniversary



## Mr. M. SELVARATNAM
(Retd. Police Officr)

Amidst chaos and cries
We see your quiding hand
With gesture and smile.
We hear your commanding voice
With greetings and praise.
We feel your courageous strength
With love and blessings in length.
We know for certain, APPAH!

YOU ARE NOT DEAD
YOU ARE JUST AWAY
BEYOND LIFE'S GATEWAY.

Loved and Remembered by your
Loving wife, children, in-laws,
grand children and loved ones.

Sangarapillai Road,
Manipay South. [14633]

# அந்தியேட்டி கிரியை அழைப்பும்
## நன்றி நவிலலும்



அன்னையின்
மடியில்:
03. 07. 1920

ஆண்டவன்
அடியில்:
07. 10. 1990

அமரர்
## திரு. ந. க. சின்னத்துரை
[யாழ்/ பிரபல வர்த்தகர்]

எமது அன்பு மாமனாரின் மரணச் சடங்கில் பங்கு பற்றிய அனைவருக்கும் நாம் நன்றி நவில்வதுடன் 06– 11– 1990 செவ்வாய்க் கிழமை அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்கு கொள்ளுமாறு வேண்டுகிறோம்

மு. பாபு (மருமகன்)
மனைவி, மக்கள், மருமக்கள்,
மற்றும் உறவினர்கள்.

(14635)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முதற்கோணல்!

அரசாங்க சேவை, மாகாண சேவை என்பவற்றில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சைகள் இம்மாதம் 17ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது, அரச அலுவலகப் பணிகளில் சராசரிப் பதவிகளாகக் கருதப்படும் எழுதுவினைஞர் முதல் களஞ்சியப் பொறுப்பாளர் வரை பல பதவிகளை நிரப்புவதற்காக இப்போட்டிப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.

அரசாங்க சேவை வேலைவாய்ப்பில் அரசியல் செல்வாக்கையும், பாரபட்சத்தையும் களைவதற்கென்று திறமைக்கு இடமளிப்பதற்கென்று, சுமார் கால்நூற்றாண்டின் பின்னர் போட்டிப் பரீட்சை முறை இப்போது தான் அமுலுக்கு வருகிறது, இன விகிதாசாரத்தில் பதவிகளை நிரப்பும் புதிய கொள்கையும் இந்தப் பரீட்சைகள் மூலம் தான் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது

இனவிகிதாசாரம் திறமை அடிப்படைகளில் அரச வேலைவாய்ப்புகள் என்ற புதிய திட்டம் தமிழர்களுக்கு நியாயம் வழங்குவதற்காகவே கொண்டு வரப்படுவதாக ஆட்சித் தலைவர்கள் அமைச்சர்கள் - கூறிவருகிறார்கள் ஆனால் வடக்கு-கிழக்கில் அரசு நடத்திவரும் யுத்தத்தினால் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் வேளையில், தமிழ் விண்ணப்பதாரிகளை ஒதுக்கிவிட்டு அரச சேவைக்கு ஆட்சேர்க்கும் பரீட்சைகளை நடத்தப்போகிறார்கள்!

வடக்கு-கிழக்கில் நடக்கும் யுத்தத்தினால் அங்குள்ள எந்தப் பகுதியிலும் இயல்பு வாழ்க்கை இல்லை தமிழர்களில் அரைப் பங்கினருக்கு மேல் இடம்பெயர்ந்து அகதிகளாகிவிட்டனர். சாதாரண கால அத்தியாவசிய அவசர சேவைகள் வசதிகள் எதுவும் சரியாகக் கிடைப்பதில்லை. யுத்தம் இன்னும் முடியவில்லை. கால அட்டவணை எதுவும் இல்லாமல் அது தொடரும் என்று அரசாங்கமும் படை உயர் அதிகாரிகளும் பூடகமாகத் தெரிவித்து வருகிறார்கள்.

இத்தகைய நிலையில், வடக்கு - கிழக்கில பொதுப் பரீட்சைகளை நடத்த முடியும் என்று அரசும் அதன் அதிகாரிகளும் எண்ணுகிறார்களா?

இன்னும் இரண்டு கிழமைகளில் போட்டிப் பரீட்சைகள் நடப்பதாயின் வடக்கு-கிழக்கில் அவை நடைபெறும் சாத்தியமோ, சூழ்நிலையோ இல்லை. தமிழ்ப் பரீட்சார்த்திகளின் நிலையைக் கருதாமல் பரீட்சைத் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களுக்கு நியாயம் வழங்க வகுக்கப்பட்ட முதலாவது நடைமுறைத் திட்டமே, அவர்கள் இல்லாமல், அவர்களை ஒதுக்கி, புறக்கணித்து, மறந்து அமுலாக்கப்பட உள்ளது! முதற்கோணின் முற்றும் கோணும். எனவே அரச வேலை வாய்ப்பில் தமிழர்களுக்கு ஒருபோதும் நியாயம் கிடைக்காது என்று அரசு மறைமுகமாகச் சொல்கிறது.

தமிழருக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று அரசு மனதார நினைக்குமானால், யுத்தநிலை சீராகும் வரை இந்தப் போட்டிப் பரீட்சைகளை ஒத்திப்போட வேண்டும். அரசும், அதன் எடுபிடிகளும் - அதிகாரிகளும் - இதனைச் செய்து காட்டுவார்களா?

## லொறியிலிருந்து சைக்கிள்காரரர் மீது தாக்குதல்

தென்மராட்சி, நவ. 5

சாவகச்சேரியிலிருந்து கேரதீவுக்கு சென்று கொண்டிருந்த சைக்கிளோட்டிகள் மீது லொறி ஒன்றில் சென்றவர்கள் தடியினால் தாக்கினர். இதனால் சைக்கிள் ஓட்டியான வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

தனங்கிளப்பு சந்தியில் இடம்பெற்ற இந்த தடியடி தாக்குதலில் மறவன்புலோவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கந்தசாமி (வயது52) என்பவரே காயமடைந்தவராவார்.

(இ-117)

# முல்லை., கிளிநொச்சிப் பகுதிகளில்

# மலேரியா பரவுகிறது

## ஆனால் போதிய மருந்து இல்லை

யாழ்ப்பாணம், நவ 5

முல்லைத்திவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மலேரியா நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது. ஆனால் அங்கு போதிய தடுப்பு மருந்து இல்லை. மருந்து வகைகள் அவசரமாக அனுப்பப்படாவிட்டால் பலர் உயிரிழக்க வேண்டிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் இருந்து திரும்பியுள்ள வைத்தியர் ஒருவர் இந்த தகவலைத் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்க வைத்திய நிலையத்தில் கடமை புரியும் இந்த வைத்தியர் மேலும் தெரிவித்ததாவது:

மழை பெய்வதாலும், அகதி முகாமாகவிருந்த பாடசாலைகள் திறக்கப்பட்டதை அடுத்து அகதிகள் ஒரே இடத்தில் நெருக்கத்தில் வாழ்வதாலும் நோய்களுக்கு ஆளாகிறார்கள்.

விசர் நாய்க்கடியால் மூவரும், பாம்புக்கடியால் ஒருவரும் கடந்த வாரத்தில் பலியாகியுள்ளனர்.

இப்படி அவர் தெரிவித்தார்.

(இ 3)

# பரீட்சைகள், பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை

யாழ்ப்பாணம், நவ. 5

அரசாங்க வர்த்தமானிகள் இம்முறையும் காலந் தாழ்த்தியே கிடைத்தன. இதனால் பல அரச பதவிகளுக்கு தமிழர்கள் விண்ணப்பிக்க முடியாத நிலை மீண்டும் ஏற்பட்டுள்ளது.

28-9-90 ஆம் திகதியிட்ட வர்த்தமானி நேற்று முன்தினம் சனிக்கிழமையே யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்தது.

இதில் நீதிச்சேவை ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு ஆகியவற்றில் பல பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வி, உயர்கல்வி அமைச்சினால் 1991 ஆம் கல்வியாண்டுக்கான தொழில்நுட்பக் கல்லூரி தராதரப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பம்; உயர் தேசிய டிப்ளோமா, தேசிய டிப்ளோமா தொழிற் பயிற்சி டிப்ளோமா என்பவற்றுக்கான அனுமதிப் பரீட்சைகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவை அனைத்துக்குமான விண்ணப்ப முடிவு திகதிகள் அனைத்தும் கடந்துவிட்டன.

இதனால, கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையில, தமிழர்கள் உள்ளார்கள்.

[அ-6]

## தொழிலதிபருக்கு கௌரவப் பட்டம்

கொழும்புத்துறை, நவ 5

மில்க்வைற் தொழிலதிபர் சிவதர்மவள்ளல் ௪. கனகராசா கௌரவ வைத்திய கலாநிதி(டி. எம் எஸ் சி.)பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

திரு: கனகராசா சித்த வைத்தியத்துறையை ஊக்குவிக்குமுகமாகச் செய்துவரும் பணிகளைப் பாராட்டி ''இலங்கை சர்வதேச இயற்கை மருத்துவர்கள் சங்கம்'' இந்தப் பட்டத்தை வழங்கியுள்ளது. [அ-30]

## படகுச்சேவை ஆரம்பம்

கடந்த ஆறு மாதங்களாகப் போக்குவரத்துச் சேவை இன்றி அல்லல்பட்ட அனலை தீவு மக்களுக்கான படகுச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திங்கள், புதன், சனிக்கிழமைகளில் இந்தப் படகுச் சேவை இடம்பெறும் அனலைதீவிலிருந்து புங்குடுதீவு குறிகாட்டுவான் வரையிலான இந்தச் சேவைக்கு எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பயணி ஒருவரிடம் இருந்து ரூபா நாற்பது அறவிடப்படுகிறது.

இதேசமயம்-

அனலைதீவிலிருந்து புறப்படும் படகு நயினாதீவுக்கு சென்று அங்கு கடற்படையினரின் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்பே புங்குடுதீவுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறது.(இ-111-6)

## 'ஆமிவருகிறது' என்று கூறி சங்கிலியுடன் ஓடியவர்

மல்லாகம், நவ. 5

பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலியை அறுத்துக் கொண்டு ''ஆமி வருகிறது,, என்று கத்திக் கொண்டு ஓடியவர் சில இளைஞர்களால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி பிரதான வீதியில் இடம்பெற்றது.

தெல்லிப்பழையைச்சேர்ந்த திருமதி திலகவதி முருகையா என்பவரின் சங்கிலியே பறிக்கப்பட்டு பின்பு மீட்கப்பட்டது.

வீதியால் சென்று கொண்டிருந்த இந்த பெண்ணின் சங்கிலியை அறுத்த பிரஸ்தாபநபர் ''ஆமி வருகிறது'' என்று கூறிக்கொண்டு ஓட அங்கு நின்றவர்களும் ஒவ்வொரு திசையால் ஓட்டம் பிடித்தனராம்.

அவரது ஏமாற்று யுக்தியை ஒரு சில கணங்களில் புரிந்து கொண்ட சில இளைஞர்கள் அவரைத் துரத்திச்சென்று மல்லாகம் கோட்டடியில் வைத்துப்பிடித்தனர்.

பின்னர் அவர் விடுதலைப் புலிகளின் தெல்லிப்பழை பிரதேசக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

(இ-ரி)

# ஒருவருட காலத்துக்குள் தள்ளாடும் வி.பி. சிங்கின் 13 கட்சிக் கூட்டாட்சி

வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு பதினொரு மாதங்களுக்கு முன்னர் பதவி ஏற்றபோது, இந்த அரசு 6 மாதங்களுக்குக் கூடத் தாக்குப்பிடிக்க மாட்டாது என்று அரசியல் வானில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் வி. பி. சிங் அரசு மேலும் ஐந்து மாதங்கள் நின்று பிடித்து தற்போது பெரும் நெருக்கடியான கட்டம் ஒன்றை அடைந்து கொண்டிருக்கிறது.

வி பி. சிங் அரசு எப்படி உருவானது என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

- தீபன்ராஜா -

1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி. நண்பகல் சழிந்து 12, 15 மணி ............

இந்தியாவின எட்டாவது பிரதமராகப் பதவி ஏற்ற திரு. விஸ்வநாத் பிரதாப் சிங் நாட்டு மக்களுக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் உரையாற்றுகிறார்......

............நீண்ட காரிருளின் பின்னர் ஒரு விடியல் பொழுது. ஆனால் அது பனிபடர்ந்த ஒன்றாக இருக்கிறது..........

இப்படி திரு, வி. பி. சிங்கின் உரை அமைகிறது.

இன்று —

அவர் பதவி ஏற்று பதினொரு மாதங்கள் கழிந்து விட்டன.

12 ஆவது மாதத்தில் அவரின் தேசிய முன்னணி காலடி எடுத்து வைத்து இருக்கிறது.

பதின்மூன்றாவது மாதத்தை, பதின்மூன்று கட்சிகள் சேர்ந்து அமைத்த அவரின் தேசிய முன்னணி அரசு காணுமா? என்ற சந்தேக நிலை ஏற்பட்டுள்ளது

இம்மாதம் 7 ஆம் திகதி நடைபெற உள்ள நாடாளு மன்றத்தின் ஒரு நாள் சிறப்புக் கூட்டத்தில், பிரதமர் சமர்ப்பித்துள்ள நம்பிக்கை கோரும் ஒரு வரிப் பிரேரணையின் வெற்றி, தோல்வியில், தேசிய முன்னணி அரசின் தலைவிதி அல்லது திரு வி. பி சிங். தலைமையின் தலைவிதி நிர்ணயிக்கப்படவுள்ளது.

### அரசியலின் பின்னணியில்

இக்கட்டத்தில் இந்திய அரசியல் பற்றிச் சில வார்த்தைகள்......

இந்தியாவின் முதல் ஏழு பிரதமர்கள் பின்வருமாறு;

பண்டிதர் ஜவஹர்லால் நேரு, லால்பகதூர் சாஸ்திரி, நந்தா (சில தினங்கள் தற்காலிக பிரதமராக), இந்திரா காந்தி, மொரார்ஜிதேசாய், சரண்சிங் (சில மாதங்கள்), ராஜீவ் காந்தி.

எட்டாவது பிரதமரான திரு. விஸ்வநாத் பிரதாப் சிங், இந்திரா காந்தி மற்றும் ராஜீவ் காந்தி ஆகியோரின் அமைச்சரவைகளில் இடம் பெற்றிருந்தவர்.

[illegible] பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, ராஜீவை விட்டுப் பிரிந்த விஸ்வநாத் பிரதாப் சிங், ராஜீவுக்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சிகள் மற்றும் உதிரிக்கட்சிகள் பலவற்றை ஒன்று திரட்டி தேசிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினார்.

### அடிப்படைக் கொள்கையில் வேறுபாடு

அடிப்படைக் கொள்கைகளில் வேறுபாடு கொண்ட பாரதிய ஜனதாக் கட்சியும் அவற்றில் ஒன்று.

மதசார்பின்மைக் கொள்கையை வற்புறுத்துபவர்களால் 'தீண்டத்தகாத' கட்சியாக பாரதிய ஜனதா கருதப்பட்டு வந்தது; இன்னமும் கருதப்பட்டு வருகிறது.

அப்படிக் கருதும் முக்கிய கட்சிகளில் மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் முக்கியமானவையாகும்.

இக்கட்சிகளும் திரு. வி பி. சிங். தலைமையிலான தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கின்றன.

அடிப்படைக் கொள்கைகளில் கருத்து வேறுபாடு கொண்ட இக்கட்சிகள் எல்லாம் ராஜீவின் ஊழல் ஆட்சியைக் கவிழ்ப்பதில் கருத்து உடன்பாடு கண்டன; அதில் வெற்றியும் கண்டன.

போட்டி தவிர்ப்பு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தி பாரதிய ஜனதா வட இந்திய மாநிலங்களில், இந்து மத அலையில் 86 ஆசனங்களைக் கைப்பற்றியது;

முஸ்லிம் மற்றும் சிறுபான்மையினரின் ஆதரவை வி.பி. சிங் தலைமையிலான ஜனதா தன் வேட்பாளர்கள் பெற்று வெற்றியீட்டினர்.

இந்து மற்றும் முஸ்லிம்களை திருப்திப்படுத்தும் நடவடிக்கையில் இந்திரா காங்கிரஸ் இறங்கியது.

இறுதியில் இருபகுதியினரையும் திருப்தி செய்வதில் தோல்வி கண்டு, தேர்தலில் இருபகுதியினராலும் 'அம்போ' என்று ராஜீவ் கைவிடப்பட்டார்.

இந்த இருபகுதியினரில் இந்துக்கள் பாரதிய ஜனதா வேட்பாளருக்கும் அவர்கள் போட்டியிடாத இடங்களில் ஜனதா தள் வேட்பாளருக்கும் வாக்களித்தனர்.

முஸ்லிம்கள் கணிசமாக வாழும் தொகுதிகளில் ஜனதா தள் வேட்பாளர்களே போட்டியிட்டதனால், இந்திரா காங்கிரஸில் அதிருப்தி அடைந்த முஸ்லிம்கள் ஜனதா தள் கட்சிக்கே வாக்களித்தனர்.

தேர்தலில் வெற்றியீட்டிய தேசிய முன்னணியினால் ஆட்சி அமைப்பதில் சிக்கல்

**செய்திக்குப் பின்னால்**

ஏற்பட்டது. அமைச்சரவையில் பாரதிய ஜனதா கட்சி சேர்க்கப்பட்டால் தங்கள் ஆதரவு கிடைக்காது என்று இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் கூறின.

சிக்கலைத் தீர்க்க ஜனதா தள் அரசுக்கு அமைச்சரவையில் சேராமல் வெளியில் இருந்து ஆதரவு வழங்குவது என்று கருத்து வேறுபாடு கொண்ட கட்சிகள் கருத்து உடன்பாடு கண்டன.

இதுவே இந்தியாவின் சரித்திரத்தில் முதலாவது சிறுபான்மை அரசு நிறுவப்பட வழிவகுத்தது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தோற்கும் நிலையில்! சகாக்கள் அதற்கு முயற்சி!!

## பிரதமர் வி. பி. சிங் கூறுகிறார்

திருவனந்தபுரம், நவ. 5

எதிர்வரும் புதன்கிழமை நம்பிக்கை வாக்கெடுப்பு நடக்கும்முன்னரே என்னைப்பதவி கவிழ்க்க எனது சகாக்கள்சிலர் பகிரங்கமாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

ஜனதாதள் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் பிரதமருமான திரு. வி. பி. சிங் முன் கண்டவாறு செய்தியாளரிடம் தெரிவித்தார்.

பிரதமர் சிங் இந்தக் குற்றச்சாட்டை வெளியிட்டபோது அவருக்கு அருகில் நான்கு மத்திய அமைச்சர்கள் இருந்தனர்

''நம்பிக்கைவாக்கெடுப்பில் எனது அரசு தோற்கடிக்கப்படும்நிலை உருவாகி வருகிறது. எனது அரசு தோற்கடிக்கப்பட்டால், இடைக்காலத் தேர்தல் நடத்தப்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும். பதவியா, நெறியா முக்கியம் என்றநிலை ஏற்பட்டுள்ளது. நெறிதான் முக்கியம் என்று தேசிய முன்னணி தீர்மானித்துவிட்டது''- இப்படி பிரதமர் சிங் தெரிவித்தார்.

இதேவேளை — ஜனதாதள் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் இன்று (திங்கள்) பிரதமர் திரு. வி. பி. சிங் தலைமையில் நடைபெறஉள்ளது.

ஜனதாதள் நாடாளுமன்றக்குழுவின் தலைவர் பதவியில் திரு. சிங் தொடர்ந்து நீடிப்பாரா என்பதை இக்கூட்டம் தீர்மானிக்க இருக்கிறது.

இதனிடையில் - திரு. சிங்கை விலக்கிவிட்டு, ஜனதாதள் நாடாளுமன்றக்குழு வேறொருவரைத் தலைவராகத் தெரிவுசெய்யின், அந்த அரசுக்கு இந்திரா காங்கிரஸ் ஆதரவளிக்கலாம் என்று கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான திரு. ராஜீவ் காந்தி தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. [இ-எ]

# சிங் பக்கம் 90 எம். பிக்கள்

புதுடில்லி, நவ. 5

தேசிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுவில் அங்கம் வகிக்கும் 146 எம் பிக்களில் 90பேரே நேற்று நடந்த குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர் என்றும் —

அவர்கள் அனைவரும் அனேகமாக வி. பி. சிங் ஆதரவாளர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டத்தில் பங்குபற்றாத 56 எம். பிக்களில் பெரும்பாலானோர் வி. பி. சிங்கிற்கு எதிரான தேவிலால் - சந்திரசேகர் குழு ஆதரவாளர்கள் என்றும் கருதப்படுகிறது.

## ஹர்த்தால்

அயோத்தி ராமர் ஆலயப் பிரச்சினையில் அரசு நடந்துகொண்ட விதத்தைக் கண்டித்து புதுடில்லியில் இன்று [திங்கள்] ஹர்த்தால் ஒன்றுக்கு பாரதீய ஜனதா கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

## ராமர் ஆலய பிரச்சினை ஒத்திவைப்பு

புதுடில்லி, நவ. 5

அயோத்தியில் ராமர் ஆலயம் கட்டும் பிரச்சினையை சில காலம் ஒத்திப்போடுவதாக விஸ்வ இந்து பரிஷத் அறிவித்திருப்பதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

குறிப்பிட்ட காலத்துக்கு இடையில் ராமர் ஆலயம் கட்டுவதற்கு அரசு அனுமதி அளிக்க மறுத்தால் கெரில்லாப் போர் நடத்தி பாப்ரி மசூதியை உடைத்துவிட்டு, அந்த இடத்தில் ராமர் ஆலயம் கட்டப்படும் என்றும் அந்த அமைப்பு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.5

யாழ்-மாவட்டப் பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள விஷேட பாடத்திட்டத்தை ஆசிரியர்களுக்கு விளக்கும் கருத்தரங்குகள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட இருக்கின்றன.

ஆசிரியர்கள் தமக்கு வசதியான நிலையங்களில் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## மேஜர் கணேஸ் நினைவு தினம்

யாழ்ப்பாணம், நவ. 5

ஸ்ரீலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த மூதூர் பிரதேசப் பொறுப்பாளர் மேஜர் கணேஸின் 4 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

அவரது நினைவாக திருநெல்வேலி தெற்கு சிவன் கோவில் வீதிக்கு ''மேஜர் கணேஸ் வீதி'' என்று பெயர் சூட்டும் வைபவம் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறும்.

அதைத் தொடர்ந்து திருநெல்வேலிசிவன்கோவிலடியில் அஞ்சலிக் கூட்டமும் இடம் பெறும். (ஒ-3)

## 4 சிங்களவர் பலி

அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கிராமம் ஒன்றில இனந்தெரியாதவர்கள் நடத்திய தாக்குதல் ஒன்றில் 4 சிங்களவர்கள் உயிரிழந்தனர் என்று கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## டிரான்ஸ்போமர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவசரமாக அனுப்பி வைக்குமாறு பலதடவை கொழும்பிலுள்ள மின்சார சபை தலைமையகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மின்சாரசபையும் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திடம் வாங்கி 'டிரான்ஸ்போமர் ஒயில்' அனுப்பத் தயாராக உள்ளது.

ஆனால் கூட்டுப்படைத் தலைமையகம்முட்டுக்கட்டையாக உள்ளது. கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதிஅளித்தால் மட்டுமே மின்சாரசபை 'ஒயில்' அனுப்பமுடியும் என்று அந்த அதிகாரி மேலும் கூறினார். [ஒ-3]

## 3 பெண்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லெப். அன்றா (நாகமுத்து திரவியநாதன் - புன்னாலைக்கட்டுவன்), 2 ஆவது லெப். ரோம் (முத்துலிங்கம் கணேசமூர்த்தி - மட்டுவில்), சேகர் (வித்தியானந்தன் அன்புகுமாரன் - இணுவில்).

டில்லி (தேவதாஸ் சாம்ஸன் - சிலாவத்தை, முல்லைத்தீவு), ஈசன் (சுப்பிரமணியம் சங்கர்-அரியாலை), கார்த்திக் (சிதம்பரநாதன் கோணேஸ்வரன் - கொக்குவில் கிழக்கு), [illegible] ([illegible] வாய் கிழக்கு, கரவெட்டி), ராஜன் (மட்டக்களப்பு). [ஒ]

# வி. பி. சிங்கை பதவி விலக்க தேவிலால் குழு தீவிரம்!

புதுடில்லி, நவ, 5

பிரதமர் பதவியில் இருந்து திரு. வி. பி. சிங் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று முன்னாள் துணைப் பிரதமர் தேவிலால் நேற்று பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

திரு. வி. பி. சிங் பதவி விலக மறுத்தால் அவருக்குப் பதிலாக புதிய தலைவர் ஒருவரை ஜனதாதள் நாடாளுமன்றக் குழு திங்கட்கிழமை [இன்று] தெரிவு செய்யும் என்றும் தேவிலால் சொன்னார்.

பிரதமர் பதவி விலக வேண்டும் என்று கோரும் குழுவில் 50 முதல் 55 எம். பிக்கள் உள்ளனர் என்றும் அவர் சொன்னார். [உ-எ]

## விநாயகர் ஆலய மதில் விழுந்தது

கொழும்பில் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஜிந்துப்பிட்டி விநாயகர் ஆலயத்தின் மதிற்சுவர் இடிந்து விழுந்தது. ஆனால் எவரும் சாயமடையவில்லை: [ஒ-3]

# மரண அறிவித்தல்கள்

## சபாபதி இராசதுரை

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த சபாபதி இராசதுரை அவர்கள் 3-11-90 சனிக்கிழமை காலமாகி விட்டார். இவர் விசாலாட்சியின் அன்புக் கணவரும், ஜெயலக்சுமி, விஜயலக்சுமி ஆகியோரின் தந்தையும், கமலேஸ்வரனின் (லண்டன்) மாமனாரும், ஆதீதனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 4-11-90 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை நண்பகல் 12-30 மணியளவில் பொக்கணை மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
விசாலாட்சியும் பிள்ளைகளும்

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(14277)

## எதிர்மனசிங்கம் (கந்தசாமி)

மானிப்பாய் சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அடம்பன் மாதா வைத்தியசாலையை வதிவிடமாகக்கொண்டவருமான டொக்டர் கே. எஸ். எதிர்மனசிங்கம் (கந்தசாமி) 31 - 10 - 1990இல் காலமானார். அன்னாரின் பூதவுடல் பெரிய பண்டிவிரிச்சானில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதனை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டொக்டர் ஸ்ரீநிவாசன்
(மருமகன்)

அடம்பன்

(14639)

## திருமதி சண்முகம் இலட்சுமிப்பிள்ளை

அத்தியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற பிரதம சலால் திணைக்கள உத்தியோகத்தர் K. K. சண்முகம் அவர்களின் அன்புப் பாரியார் திருமதி இலட்சுமிப் பிள்ளை அவர்கள் 4-11-1990 மாலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் மகாதேவா [ரேடியோகிராபர், சிலாபம்], வாமதேவா [இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர், ஊரெழு], Dr. சிறிதேவா [கொழும்பு], நீலாதேவி தயாபரன் [இறைவரித் திணைக்களம்], தயாளதேவா [மக்வுட்ஸ்], அனுசாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், தயாபரன் C.A S [UNDP], விக்னேஸ்வரி மகாதேவா, விக்னேஸ்வரி வாமதேவா, சௌந்தரி தயாளதேவா [ஆசிரியை, கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 5-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் அன்னாரது 45/2, அம்பலவாணர் வீதி, அத்தியடி இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வாமதேவா

ஊரெழு.

[14279]

## அம்பலவாணர் சீவரத்தினம்

அராலி தெற்கைச் சேர்ந்த திருமதி அம்பலவாணர் சீவரத்தினம் 4-11-1990 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வே. அம்பலவாணரின் அன்பு மனைவியாரும், அ. சிவானந்தன் [ஆசிரியர், இந்துக் கல்லூரி, அராலி], அ. சற்குணானந்தன் [பிராந்திய முகாமையாளர்-பின்கம் விவசாயப் பகுதி] ஆகியோரின் அன்புத் தாயாரும், இளைப்பாறிய ஆசிரியைகள் செல்வி தங்கம்மா ஆறுமுகம், திருமதி திலகவதியம்மா விஸ்வரத்தினம், திருமதி அன்னம்மா திருவிளங்கம், காலஞ்சென்ற ஆறுமுகம் கயிலாயபிள்ளை [இளைப்பாறிய ஓவசியர்], ஆறுமுகம் இராசநாயகம் ஆகியோரது அன்பு சகோதரியும், திருமதி சி. ஜெயரதி, திருமதி ச. சக்தீஸ்வரி ஆகியோரது அன்பு மாமியாரும், விநோதினி, வித்தகன், சுதன், சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-11-90 [இன்று] பி ப 3 00 மணிக்கு அராலி தெற்கில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
அ. சற்குணானந்தன்

[14280]


A/L விஞ்ஞான மாணவர் கவனத்திற்கு

**இடமாற்றம்**

**"A" LEVEL CENTRE**

3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்; மணல்தரை லேன், கந்தர்மடம் ஆகிய இரு இடங்களிலும் இயங்கி வந்தஎமது கல்வி நிறுவனத்தை,

பருத்தித்துறை வீதி, 1ஆம் ஒழுங்கைக்கு மாற்றியுள்ளோம். (Mack Travels அருகாமையில்)

எதிர்வரும் புதன்கிழமை 07 - 11 - 1990 அன்று 90 ம், 91 ம், 92 ஆம் ஆண்டு பிரிவுகளைச் சேர்ந்த எமது மாணவர்களை முறையே பிற்பகல் 1.30 p m, 2 00 p m, 2.30 p m அளவில் சந்தித்து மேலும் வகுப்புக்கள் ஆரம்பம் பற்றி முழு விபரங்களையும் பெற்றுக்கொள்ளவும்.

- நிர்வாகம்.

(கி-5374)


## முதலாண்டு நிறைவு அஞ்சலி

அமரர்

**கந்தசாமி - இராசசேகரன்**
(சேகர்)

மலர்வு: 08- 07- 1967

உதிர்வு: 14- 11- 1989

திதி: 05- 11- 1990

அன்பின் மகனே!
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உன் அன்பின் திருவுருவம் தான் மறக்கமுடியுமோ?

மகனே என்நாளும் உமது அன்னையின் கண்ணீர் தான் உமக்கு அர்ச்சனைப் பூக்களாகி விட்டனவே!

எம்மையெல்லாம் ஆறாத்துயர் கொள்ள வைத்து மீளாத் துயில் கொண்டீரோ?

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் கை ஏந்துகின்றோம்.

அன்பான:
அப்பா, அம்மா, சகோதரங்கள்.

ஐயனார் கோவிலடி,
6 ஆம் வட்டாரம்,
வேலணை.

[14624]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org